## திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(செப்டம்பர் 23-ம் தேதி முதல் செப்டம்பர் 27-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (18.9.15- 21.9.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 1.9 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35- 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25- 26 |
| வானம் (ஆக்டா) | 2- 3 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 55- 66 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 43- 51 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0- 3 |
| காற்றின் திசை | 0- 320 |

**27.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>23.9.15 | நாள் 2<br>24.9.15 | நாள் 3<br>25.9.15 | நாள் 4<br>26.9.15 | நாள் 5<br>27.9.15 |
| மழை (மி.மீ.) | 3 | 4 | 4 | 8 | 5 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35 | 35 | 34 | 34 | 34 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 25 | 24 | 24 | 24 |
| வானம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 3 | 3 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 48- 56 | 49- 58 | 49- 58 | 52- 60 | 50- 59 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2/ வடக்கு | 2/ வடக்கு | 2/ வடக்கு | 2/ வடக்கு | 2/ வடக்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | நிலம் தயாரித்தல் | தாளடி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல்லுக்கு நீர்த்தேவையை குறைக்க தொழி உழவு மற்றும் சமப்படுத்துதல் ஆகியவற்றை சிறப்பாக செய்தல் அவசியம். தொழி உழவு நன்றாக செய்வது கீழ்நோக்கி அடிமண்ணுக்கு செல்லும் நீர் இழப்பை குறைத்து நீர்த்தேவையை 20 சதம் வரை சேமிக்க உதவும். 2.5 செ.மீ. அளவு நீரை தேக்கி வைத்து தொழி உழவு செய்து |

| | | |
|---|---|---|
| | | பசுந்தாள் உரங்களை நன்கு மட்குவதற்காக எளிதில் மக்கும் பயிர்களான சணப்பு போன்ற பயிர்களுக்கு குறைந்தபட்சம் ஏழு நாட்கள் வரையும் கொழிஞ்சி போன்ற பயிர்களுக்கு பதினைந்து நாட்கள் வரையும் கால அவகாசம் கொடுக்கவும். |
| பருத்தி, சோளம், பயறு வகைகள் | பூஞ்சாள கொல்லி விதைநேர்த்தி | மானாவாரி பயிர்களில் விதைமூலம் பரவும் நோய்களை தடுப்பதற்காக கார்பன்டசிம் அல்லது கேப்டான் அல்லது திராம் பூஞ்சாள கொல்லியை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்கவும். பூஞ்சாள கொல்லிகளுக்கு பதில் விதைகளை உயிர்எதிர்க்கொல்லிகள் *சூடோமோனாஸ் புளூரசன்ஸ்* 10 கிராம்/ கிலோ மற்றும் *டிரைக்கோடெர்மா விரிடி* 4 கிராம்/ கிலோ என்ற அளவில் விதையுடன் சேர்த்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். உயிர் உரங்களையும் உயிர்எதிர்க்கொல்லிகளையும் ஒரே சமயத்தில் கலந்து விதை நேர்த்தி செய்யலாம். இந்த விதை நேர்த்தியை இறுதியாக செய்ய வேண்டும். |
| சோளம் | விதையளவு | மானாவாரியில் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்வதற்கு 22.5 கிலோ/எக்டர் என்ற அளவில் (பரிந்துரைக்கப்படும் விதையளவின் 1.5 மடங்கு) விதைகளை பயன்படுத்தவும். |
| | விதை கடினப்படுத்துதல் | மானாவாரியில் முன்பருவ விதைப்பு செய்யப்படும் சோளத்தின் முளைப்புத்திறனை மேம்படுத்த விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். விதைகளை 2 சத பொட்டாசியம் டைஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும். |
| | பூச்சிக்கொல்லி விதை நேர்த்தி | மானாவாரியில் சோளத்தில் பூச்சி தாக்குதலை குறைக்க விதைகளை 15 கிராம் குளோர்பைரிபாஸ் + 150 மி.லி. பசையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்கவும். |
| சோளம், பருத்தி | உயிர்உர விதைநேர்த்தி | மானாவாரி சோளம் மற்றும் பருத்தியில் உரத்தேவையை குறைக்கும் விதத்தில் உயிர் உரங்களை பயன்படுத்தவும். 3 பாக்கெட்டுகள் அசோஸ்பைரில்லம், 3 பாக்கெட்டுகள் பாஸ்போபாக்டீரியா அல்லது 6 பாக்கெட்டுகள் அசோபாஸ் உடன் விதைகளை விதைநேர்த்தி செய்து விதைக்கவும். விதை கடினப்படுத்துதல் மற்றும் பூச்சிக்கொல்லி விதைநேர்த்தி ஆகியவற்றை முடித்தபிறகு இறுதியாக உயிர் உர விதைநேர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சோளம் | விதைத்தல் | கடினப்படுத்தப்பட்ட சோள விதைகளை பருவமழை தொடங்குவதற்குமுன்பு முன்பருவ விதையாக 5 செ.மீ. ஆழத்தில் விதை மற்றும் உரம் விதைக்கும் கருவியைக்கொண்டு சீராக 5 செ.மீ. ஆழத்தில் விதைக்கவும். 40:20:0 கிலோ/ எக்டர் என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவும். உரம் விதைக்கப்பட்ட அதே வரிசையில் விதைகளை விதைத்து மண்ணால் மூடவும். விதைகளை 15 செ.மீ. இடைவெளியில் 60 செ.மீ. இடைவெளியில் அமைந்த இரட்டை வரிசைகளில் விதைக்கவும். |

குறுஞ்செய்தி-: மழை: செப்டம்பர் 23-27: 3, 4, 4, 8& 5 மி.மீ. மானாவாரி பயிர்கள்- பூஞ்சாள கொல்லி விதைநேர்த்தி- கார்பன்டசிம் 2 கிராம்/கிலோ விதை- கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி